# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்குமாகாணம்

# மாதிரிப்பரீட்சை - 2020

| நாடகமும் அரங்கியலும் II | 58-T-II | நேரம் - 3 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

**அறிவுறுத்தல்கள்**

*எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக

*இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவுசெய்க.

1. இந்தியக் கலைகளில் மேலோங்கியிருக்கும் பண்புகள்?
   1. அறிவும், கற்பனையும்
   2. ஆன்மஞானமும் இறைபக்தியும்
   3. இறைபக்தியும் ஒழுக்கமும்
   4. தத்துவமும் உண்மையும்
   5. கற்பனையும் ஆன்மஞானமும்

2. ஜேர்மனிய அறிஞரான ஸ்லீகல் (Sehlegal) என்பவர் உறைந்து போன இசைக்கலை என வர்ணிக்கும் கலை வடிவம்?
   1. ஓவியம்
   2. சிற்பம்
   3. கட்டடம்
   4. நாடகம்
   5. நடனம்

3. அபிக்ஞான சாகுந்தலம் நாடகத்தில் ஆகாயக் கிளர்த்தல் எனும் சொல்லாடலுக்குரிய பாத்திரம்?
   1. சகுந்தலை
   2. துஸ்யந்தன்
   3. விதூசகன்
   4. கண்ணுவர்
   5. துருவாசமுனிவர்

4. பிள்ளைவரம் வேண்டுதலுடன் தொடர்புடைய மலையகச் சடங்காற்றுகை?
   1. காமன்கூத்து
   2. அருச்சுணன்தபசு
   3. பொன்னர்சங்கர்
   4. வீரபத்திரர் ஆட்டம்
   5. காடேறித்திருவிழா

5. இந்தியாவின் கேரளப்பிரதேசத்தில் ஆடம்படும் இரு ஆற்றுகைகள்?
   1. கதகளி, தெருக்கூத்து
   2. தெருக்கூத்து, மணிப்புரி
   3. கதகளி, ஒடிசி
   4. கதகளி, கூடிஆட்டம்
   5. யக்சகானம், கூடியாட்டம்

6. சிங்கள நாடக அரங்கில் இடம் பெறும் தொவில் என்பது தமிழர்களின் எச் சடங்கோடு ஒப்பிடப்படுகிறது?
   1. வேட்டைத்திருவிழா
   2. மானப்பூச் சடங்கு
   3. கழிப்புச் சடங்கு
   4. குளுர்த்தி
   5. சூரன் போர்

7. நாட்டிய சாஸ்திரம் கூறும் பத்துவகை நாடகங்களில் நாடக ஆசிரியரின் கற்பனையால் படைக்கப்படுகின்ற நாடக வகை எது?
   1. நாடக
   2. பிரகரண
   3. பிரஹசன
   4. சமவஹார
   5. ஈஹாமிருக

8. நவவேட்கை வாதிகளில் ‘‘வலிந்து தாக்கும்’’ அரங்கைத் தோற்றிவித்தவர்?

1. அல்பிறட் ஜெறி 2. அன்ரனி ஆர்த்தே 3. பீற்றர் புறூக்
4. ஜேர்சி குறட்டோவஸ்கி 5. றிச்சட் செக்னர்

9. பார்ப்போர் உணர்ச்சிக்கு ஆட்படாது நாடகங்களைப் பார்த்துச் சிந்திக்க வேண்டும் எனக் கூறியவர்?

1. அரிஸ்ரோட்டில் 2. பரதர் 3. பேற்றோல் பிறஜ்
4. ஸ்ரனிஸ்சிலவ்ஸ்கி 5. ஆன்ரன் செக்கோவ்

10. அகஸ்தா போல் பற்றிய தவறான கூற்று.

1. இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.
2. பங்குகொள் அரங்க முறையை நிராகரித்தவர்.
3. ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கினைத் தோற்றுவித்தவர்.
4. பார்ப்போரைச் செயல்முனைப்புடைய பார்ப்போராக்க விரும்பியவர்.
5. அரங்கை சமூகத்தளை உளவியற்தளை நீக்கத்திற்கான ஒன்றாகவும் வடிவமைத்தார்.

11. 1978ம் ஆண்டு அவைக்காற்றுக் கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் தலைவராகச் செயற்பட்டவர்?

1. ஏ. ஜே. கனகரட்ணா 2. க. பாலேந்திரா 3. கா. சிவத்தம்பி
4. மு. நித்தியானந்தன் 5. சு.வித்தியானந்தன்

12. சீன ஒபேரா நாடகத்தின் தற்போதைய தலைவராக விளங்குபவர்?

1. லீபூஷாகே 2. மீ வாங் பாங் 3. சியான் யூயின்
4. சியாமி மொன்டாக்கியே 5. கியாமி மொன்டாக்கியே

13. இராவணேசன், வாலிவதை, கர்ணன் போர், நொண்டி போன்ற நாடகங்கள் முதன் முதலாக மேடையேற்றப்பட்ட பல்கலைக்கழகம்?

1. கொழும்பு பல்கலைக்கழகம் 2. பேராதனைப் பல்கலைக்கழகம்
3. கிழக்குப் பல்கலைக்கழகம் 4. கட்டுப் பொத்த வளாகம்
5. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

14. கோலம் நிகழ்த்துகையின் ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்து, புத்தருக்கு வணக்கம், கோலவரலாறு கூறுதல், சபைவணம் என்பன இடம் பெறும் அதனைத் தொடர்ந்து கோல ஆட்டம் தொடங்கும் இதில் சபை வணக்கம் செலுத்துபவர் எவ்வாறு அழைக்கப்படுவர்?

1. பொத்தேகுரு 2. சபாபதி 3. குருணான்சே
4. காரியகரவணராலா 5. பகுபூதையா

15. யப்பானிய நோ அரங்கிலே யூஜென் (Yugen) எனும் அழகியல் திருப்தியைப் பெற உதவி நிற்கும் அடிப்படையான நான்கு அம்சங்களும் யாவை?

1. யதார்த்தம், ஒழுங்கு, எளிமை, அழகு
2. குறியீடு, ஒழுங்கின்மை, சிக்கல், அழியும் தன்மை
3. யதார்த்தம், ஒழுங்கு, எளிமை, அழியும் தன்மை
4. குறியீடு, ஒழுங்கின்மை, எளிமை, அழியும் தன்மை
5. யதார்த்தம், போட்டி, முன்னோக்கு, அழகு

16. மத்திய காலத்தில் தோன்றிய முதலாவது நாடக நிகழ்வான குவாம் குவாறிட்டீஸ் (Quem Quarities) என்பது எவ்வகை நாடகமாகக் கொள்ளப்பட்டது?
    1. திருமறை நாடகம் 2. மறை பொருள் நாடகம்
    3. ஒழுக்கப்பண்பு நாடகம் 4. அற்புத நாடகம் 5. பூசை நாடகம்

17. "பச்சைநிறத் தோளழகா பவளநிற மார்பழகா..." என்ற பாடலுக்குரிய பாத்திரம்?
    1. மன்மதன் 2. ரதி 3. இந்திரன்
    4. திருமால் 5. தூதுவன்

18. உலக வரலாற்றில் அரங்கக் கோமகன் என சிறப்பிக்கப்படுபவர்?
    1. சேக்ஸ்பியர் 2. ஸ்ரனிஸ்லவஸ்கி 3. எமிலிசோலா
    4. பேட்டோல் பிறெட் 5. லோட்சேக்ஸ் மலிங்கன்

19. பேராசிரியர் மௌனகுரு தயாரித்த இராவனேசனில் "ஆனதோ சண்டை சானகிதுயர் போனதுமில்லையோ..." எனும் பாடலைப்பாடும் பாத்திரம்?
    1. இராவணன் 2. இராமன் 3. இந்திரஜித்
    4. கும்பகர்ணன் 5. மண்டோதரி

20. தெருக்கூத்தினைப் பாரம்பரியமாக ஆற்றுகை செய்து வந்தவர்?
    1. சூரியநாராயண சாஸ்திரியார் 2. அ. மங்கை 3. கிறிஸ் கார்டினர்
    4. வெளிரங்கராஜன் 5. புரிசை கண்ணப்ப தம்பிரான்

21. சங்ககாலத்தில் கிணை, முரசம் போன்ற இசைக்கருவிகளை வாசித்தோர்?
    1. விறலியர் 2. கோடியர் 3. பாணர்
    4. பொருணர் 5. வயிரியர்

22. ஸ்பானிய அரங்கிலே அதிக தாக்கத்தை உண்டுபண்ணிய அரங்கவியலாளர்?
    1. மோலியர் 2. பியஸ்கெனே 3. றசீன்
    4. லோப்போ டீ பேக்கா 5. றிச்சட் சதேன்

23. சமஸ்கிருத நாடகங்களிலே நாடகச்செயலின் நோக்கத்தைக் குறிக்கும் சந்தி?
    1. முக சந்தி 2. பிரதி முக சந்தி 3. கர்ப்ப சந்தி
    4. விமர்சக சந்தி 5. நிர்வஹண சந்தி

24. எந்தையும் தாயும் நாடகத்தை முதன்முதலாக நெறியாள்ளை செய்தவர்?
    1. அ. தாசீசியஸ் 2. க. ரதிதரன் 3. சி. மௌனகுரு
    4. குழந்தை. ம. சண்முகலிங்கம் 5. வைத்திய கலாநிதி. சிவயோகன்

25. முதலாம் உலகப்போருக்குப் பின்னர் ஊம நாடக முறைமைக்கு அத்திவாரமிட்டவர்?
    1. ஒகஸ்டஸ் 2. யக்குஸ்கோப்பா 3. மார்சல் மாஸ்யூ
    4. சார்ளி சப்ளின் 5. அலெக்சாண்டர் டுமாஸ்

26. காடேறித் திருவிழா இடம் பெறும் பிரதேசம்?
    1. யாழ்ப்பாணம் 2. மட்டக்களப்பு 3. மன்னார்
    4. மலையகம் 5. மகியங்கனை

27. வீரவழி பாடுகளே திறஜெடியின் தோற்றத்திற்கு காரணம் எனக் கூறியவர்?
    1. பேராசிரியர் கா. சிவத்தம்பி 2. ஜோன் ஹறீசன் 3. கீத்
    4. றிட்ஜ்வே 5. A. J. குணவர்த்தன

28. மகேந்திர வர்மனால் எழுதப்பட்ட நாடகமாக அமைபவை?
    1. இராஜ இராஜ சோழன், பகவத அர்ஜியம்
    2. பூம்புலியார், மத்தவிலாசபிரகனம்
    3. திருமூலர், இராஜ இராஜ சோழன்
    4. பூம்புலியார், பகவத அர்ஜியம்
    5. பகவத அர்ஜியம், மத்தவிலாசப்பிரகசனம்

29. தென்பாங்கு தொடர்பான பிழையான கூற்று?
    1. மன்னார் மாதோட்டத்திற்குரிய தனித்துவமானது.
    2. கடவுள் வாழ்த்து வெண்பாவில் அமையும்.
    3. தரு, சிந்து, வண்ணம் போன்ற பாவினங்கள் அதிகம் பயன்படுத்தப்படும்.
    4. பாடல்கள் மெல்லோசை உடையது.
    5. மத்தளம், கைத்தாளம் மட்டுமே பயன்படுத்தப்படும்.

30. “ என்றோ ஒருநாள் இருந்து பார் மாணிக்கம் நின்றந்தக் கோயில் நிமிர்ந்து நெடுந்தூரம்..” என்று அமையும் சொல்லாடலைக் கூறும் பஞ்சையரிடம்
    1. எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கை காணப்படுகிறது.
    2. அந்நியர் விளைவிக்கும் துயரம் காணப்படுகிறது.
    3. அந்நியர் ஆட்சியின் சிறப்பு காணப்படுகிறது.
    4. எதிர்காலம் பற்றிய நம்பிக்கை காணப்படுகிறது.
    5. அந்நியர் ஆட்சியின் ஆதரவு காணப்படுகிறது.

31. கதிரைப்பூசை இடம் பெறும் நாட்டார் வடிவம்?
    1. வேடன்பறி
    2. நாட்டை
    3. வாசகப்பா
    4. பொன்னர் சங்கர்
    5. மகிடி

32. சிலப்பதிகாரத்தில் நாடகப் பயிற்சி பற்றி கூறும் பகுதி?
    1. கடலாடுகாதை
    2. கானல்வரி
    3. மங்கலவாழ்த்துப் பாடல்
    4. அரங்கேற்றுகாதை
    5. வழக்காடுகாதை

33. கிங்கிலியர் நாடகத்தில் “குறும்புப்பையனிடம் அகப்பட்ட இலையான் போலக் கடவுள் தம்விளையாட்டிற்காக எம்மைப் படைத்தார்” எனும் வாக்கியத்திற்குரிய பாத்திரம்?
    1. லியர்
    2. கென்ற்பிரபு
    3. பர்கண்டிபிரபு
    4. எட்மண்ட்
    5. கினஸ்டர்பிரபு

34. ஈழத்தில் 1980 களில் பெண்ணியக் கருத்துக்களைப் பேசி நின்ற நாடகங்கள் யாவை?
    1. சக்தி பிறக்குது, வழிப்பு, கடூழியம்
    2. மாதொரு பாகம், அடுப்படி அரட்டை, காலம் சிவக்கிறது
    3. தாயுமாய் நாயுமானார், சக்தி பிறக்குது, கூர்
    4. சரிபாதி, மாதொரு பாகம், பொறுத்தது போதும்
    5. சக்தி பிறக்குது, மாதொருபாகம், மானிடம் என்பது புல்லோ

35. கூத்து மரபிலே “சட்டம் கொடுத்தல்” என்பதன் அர்த்தம்?

1. ஏட்டுப்பிரதி கொடுத்தல்
2. பாத்திரம் வழங்கல்
3. ஒத்திகை பார்த்தல்
4. ஒப்பனை செய்தல்
5. இறுதி ஒத்திகை பார்த்தல்

36. பேராசிரியர் சு. வித்தியானந்தனைத் தொடர்ந்து பல்வேறு கூத்துப் புத்தாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் கூத்தினையும் பரதத்தினையும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட “கானகம் ஏகிய இராமன்” என்ற நாடகத்தை எழுதியவர்?

1. யோன்சன் ராஜ்குமார்
2. கார்த்திகா கனேசர்
3. சி. மௌனகுரு
4. இளையபத்மநாதன்
5. அ. பிரன்சிஸ் ஜெனம்

37. படத்தில் காட்டப்பட்டுள்ள ஒளியமைப்பின் கருவி?



1. பொட்டொளி
2. பரப்பொளி
3. ரான்ஸ்போமர்
4. மங்கலாக்கி
5. வர்ணச்சில்லு

38. படத்தில் பாட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர்?



1. யூரிப்பிடிஸ்
2. அரிஸ்ரோட்டில்
3. மெனாண்டர்
4. பிளேட்டஸ்
5. செனாக்கா

39. படம் குறித்து நிற்கும் சிங்கள நாடகவியலாளர்?



1. எதிர்வீரசரத்சந்திரா
2. குணசேனகலபதி
3. காமினி கத்தொட்டுவேகம
4. சந்திரசேனதசநாயக்க
5. பராக்கிரமநிரியல்ல

40. இந்திய நாடகக் கலைக்கு பெரும் பங்காற்றியவர்?



1. பேராசிரியர் இராமானுஜம்
2. பாதல் சர்க்கர்
3. பம்மல் கே. சம்பந்தம்
4. சங்தரதாஸ் சுவாமிகள்
5. புரிசை கண்ணப்பதம்பிரான்

# பகுதி II

## அறிவித்தல்

பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களுக்குக் குறையாமலும் பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களுக்கு குறையாமலும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

1. சோ.ஃ.போகிளிசின் உன்னத படைப்பாக "ஈடிபஸ்" மன்னன் நாடகம் கருதப்படுகிறது.

அதனடிப்படையில்

1. ஈடிபஸ் மன்னன் நாடகத்தின் பிரதான முரண்பாடு யாது? அம்முரண்பாடு பாத்திரங்களினூடாக கட்டிவளர்க்கப்படும் முறையை விபரிக்குக.
2. ஈடிப்பஸ் மன்னனானவன் சிலுவைச் சுமப்பின் அடையாளமாகத் திகழ்கின்றான். இக்கூற்றின் பொருத்தப்பாட்டை உதாரணத்துடன் விளக்குக.
3. ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தினை நெறியாள்கை செய்வதற்கு நீர் பணிக்கப்பட்டிருப்பின் அந் நெறியாள்கைக்கான திட்டமிடல்களை குறிப்பிடுக.

(3 X 5 = 15 புள்ளிகள்)

2.

1. ஹென்றிக் இப்சனது ஒருபாவை வீடு நாடகத்தின் கருவான வெளிப்பட்டு நிற்கும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக.
2. ஒருபாவை வீடு நாடகத்தில் யதார்த்தவாதம் வெளிப்படும் சந்தர்ப்பங்களை குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக.
3. ஒருபாவை வீடு நாடகத்திற்காக காட்சியமைப்பினை மேற்கொள்ள நீர் பணிக்கப்பட்டிருப்பின் முதலாம் காட்சிக்கான மாதிரி வரைபடம் ஒன்றை வரைந்து காட்டுக.

(3 X 5 = 15 புள்ளிகள்)

3.

1. இராவணேசன் நாடகத்தின் கூத்துப்பண்புகளை எடுத்துக்கூறி விளக்குக.
2. இராவணேசன் நாடகத்தில் காணப்படும் நவீன நாடக உத்திகளை குறிப்பிட்டு விளக்குக.
3. இராவணேசன் நாடகம் ஆற்றுகை செய்யப்பட்ட காலங்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு காலத்திலும் காணப்பட்ட ஆற்றுகைகான பின்னனியினைக் குறிப்பிட்டு விளக்குக.

(3 X 5 = 15 புள்ளிகள்)

## பகுதி B

**4.** அபிஞ்ஞான சாகுந்தலம் நாடகம் நாட்டிய சாஸ்திர விதிமுறைக்குட்பட்டதா? உமது விடைக்கான ஆதாரத்தினை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

**5.** ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சியில் அரங்க நிறுவனங்களது பங்களிப்புக்கள் காத்திரமானவை. அவ்வாறு நாடக முயற்சிகள் மேற்கொண்ட அரங்க நிறுவனங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பங்களிப்பக்களை மதிப்பீடு செய்க.

(15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. குறு நாடகம்
2. கலையரசு சொர்ணலிங்கம்
3. கோயில் பண்பாட்டுக் காலம்
4. நோ
5. ஒகஸ்தாபோல்